## திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு - C

## 2021-12-12

(*இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் செப்பனியா நூலிலிருந்து வாசகம்* 3: 14-17,

*எசா* 12: 2-3. 4. 5-6,*திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 4: 4-7,

*லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 3: 10-18 )

**திருப்பலி முன்னுரை:**

*மகிழ்ச்சிக்குரியவர்களே, திருவருகைக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். அண்மையில் உள்ளதை நினைத்து அகமகிழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. நமது மகிழ்ச்சியை மட்டுமல்ல, நம்மிடம் உள்ள அனைத்தையுமே பிறரோடு பகிர்ந்து வாழ திருமுழுக்கு யோவான் நம்மைத் தூண்டுகிறார். "இரண்டு அங்கிகளை உடையவர் இல்லாதவரோடு பகிர்ந்துகொள்ளட்டும்; உணவை உடையவரும் அவ்வாறே செய்யட்டும்." தூய ஆவி என்னும் நெருப்பால் நமக்கு திருமுழுக்குக் கொடுக்கும் வலிமைமிக்க ஆண்டவரின் வருகைக்காக நாம் காத்திருக்கிறோம். அணையா நெருப்பிலிட்டுச் சுட்டெரிக்கப்படும் பதராக இல்லாமல், அவருடைய களஞ்சியத்தில் சேர்க்கப்படும் கோதுமையாக வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

**விசுவாசிகள் மன்றாட்டுகள்:**

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

**மகிழ்ச்சி தருபவராம் இறைவா,**

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் உமது திருமகனின் அருளால் நிரப்பி, நிலை வாழ்வில் நம்பிக்கை கொண்டவர்களாய் உம்மில் மகிழ்ந் திருக்க உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

**கனிவு மிகுந்தவராம் இறைவா,**

*உலக நாடுகளின் தலைவர்கள் அனைவரும், உமது அரசை விரும்பித் தேடவும், நீதி மற்றும் உண்மையின் வழியில் மக்களை வழிநடத்தவும் துணைநிற்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***புனிதத்தின் ஊற்றாம் இறைவா,***

*எம் நாட்டு மக்களை தவறான வழியில் வழிநடத்தி, உமது நற்செய்தி பரவ தடையாக இருக்கும் உண்மைக்கு எதிரான அமைப்புகள் அழிந்தொழிய அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***வாக்குமாறாத தெய்வமே!***

*பல்வேறு தேவைகளுடன் இன்றைய திருப்பலியில் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் மக்கள் அனைவரும் தாம் எதிர்நோக்கி காத்திருக்கும் காரியங்கள் நிறைவேற்றப்பட்டு வாக்குமாறாத தெய்வமாகிய உம்மேல் இன்னும் அதிக நம்பிக்கை கொண்டவர்களாக, தன் விசுவாச வாழ்வை புதுப்பித்துக் கொள்ளும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***எமக்கு இரங்கும் தாவீதின் மகனே, எம் இறைவா!***

*தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து முழுமையாக விடுதலைப் பெறவும், வருங்காலத்தில் எம் சந்ததினர் நற்சுகமும், மனபலமும், பொருளாதார வளர்ச்சியும் பெற்று இவ்வுலகில் உமது செய்வீரர்களாய் பணிசெய்திட அவர்களுக்கு ஞானத்தையும், திடமான நம்பிக்கையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***அமைதியான நீர்நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்லும் தந்தையே இறைவா!***

*வரும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவின் முன் தயாரிப்புகளை நாங்கள் வெறும், வெற்று வெளி அடையளங்களை மையப்படுத்தி வாழாமல் ஆன்மீகத் தயாரிப்புகளில் எங்களைப் புதுப்பித்துக் கொண்டு, உம் பிறப்பு ஏழைகளுக்கு நற்செய்தியாக அமைந்தது போல நாங்களும் நற்செய்தியின் தூதுவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

***நீதியின் ஒளியே எம் இறைவா!***

*விசுவாசத்தில் நிலைத்திருக்கும் அனைவரும் இயேசுவின் உயிர்ப்பில் பங்குபெறுவர் என்று உணர்த்திய இறைவா! இறந்த விசுவாசிகளாகிய எங்கள் உறவினர்கள், நண்பர்கள், யாரும் நினையாத ஆன்மாக்கள் உமது நித்தய பேரின்பத்தை அடைந்து மகிழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

***குணம் அளிப்பவராம் இறைவா,***

*உலகின் இன்பத்தை நாடி தீய நாட்டங்களுக்கும், தீங்கு விளைவிக்கும் கெட்ட பழக்கங் களுக்கும் அடிமைகளாகி தவிப்போர், நிலையான மகிழ்ச்சி தருபவராம் உம்மை சரணடைய வழிகாட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*